## மாவட்ட உரிமையியல் மற்றும் குற்றவியல் நடுவர் நீதிமன்றம்
## ஆத்தூர்
------
## அசல் வழக்கு எண்.37/2022

**2024ம்** வருட நவம்பர் மாதம் 19ஆம் நாள் வாதி தரப்பு சாட்சியான வா.சா.1-இன் வாக்குமூலம் 1873ம் வருடத்திய 10வது விதியின்படி ஆணையிட்டு உறுதி கூறப்படுகிறது.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | லாடதவசி | ஜாதி | : | |
| த.பெ | : | டி. தன்னாச்சி | தொழில் | : | கொத்தனார் |
| கிராமம் | : | தொப்பம்பட்டி | சமயம் | : | |
| தாலுகா | : | ஆத்தூர் | வயது | : | 54/2024 |

தேதி : 19.11.2024

**7** முதல் **11** பிரதிவாதிகள் வரை குறுக்கு விசாரணை

நீதிமனறத்தில் தாக்கல் செய்துள்ள பட்டா எனது அப்பா பெயரில் உள்ளது. பட்டா அளவுப்படி 160 சதுர அடி உள்ளது. எனது அப்பாவிற்கு பாத்தியப்பட்ட இடம் 160 சதுர அடி என்றால் சரிதான். எனது அப்பாவிற்கு இரண்டு மனைவிகள். ஒரு மனைவிற்கு நாங்கள் என்னுடன் சேர்ந்து 4 மக்கள் ஆகும். மற்றொரு மனைவிக்கு 3 மக்கள் ஆவார்கள். மேற்கண்ட 160 சதுர அடியை நாங்கள் பாகப்பரிவினை செய்துகொள்ளவில்லை. எனது அப்பாவின் வாரிசுகளில் நான் மட்டும் தான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன். இந்த வழக்கில் பிரதிவாதியாக சேர்க்கப்பட்டுள்ளவர்களின் விபரம் எனக்கு தெரியும். D12 ஆன செயலாளர், காதி அறக்கட்டளை என்பவர் குழந்தைகள் காப்பகம் வைத்து நடத்தி வந்தார் என்றால் அது பற்றி தெரியவில்லை. D12 ஐ எதற்காக இந்த வழக்கில் சேர்த்துள்ளேன் என்றால் அவரிடம் இருந்து ஒரு பேப்பர் வந்தது, அதனால் சேர்த்துள்ளேன். D12 தாவா சொத்துள்ள இடத்தில் நீண்ட நாட்களாக குழந்தைகள் காப்பகம் நடத்தி வந்தார் என்றும், அதில் எங்கள் ஊரை சேர்ந்த பல நபர்கள் படித்துள்ளார்கள் என்று சொன்னால் சரியல்ல. நான் அருகில் உள்ள இடத்தை ஆக்கிரமித்து வீடு கட்டியுள்ளேன் என்றால் சரியல்ல. நான் உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்தேன், அவர்கள் தாசில்தாரிடம் மனு தாக்கல் செய்ய சொன்னார்கள், தாசில்தார் எனது மனுவை தள்ளுபடி செய்துவிட்டார். உயர் நீதிமன்றம் எனது மனுவை தள்ளுபடி செய்துவிட்டது என்றும், நான் அக்கிரமித்த இடத்தை அப்புறப்படுத்த உயர் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது என்று சொன்னால் சரியல்ல. ரெங்கசாமி என்பவர் நான் ஆக்கிரமித்து இருந்ததை அகற்ற வேண்டும் என்று உயர் நீதிமனறத்தில் மனு தாக்கல் செய்தார் என்றால் அது பற்றி தெரியவில்லை. மேற்கணட வழக்கிலும் உயர் நீதிமன்றம் ஆக்கிரமிப்பை அகற்ற வேண்டும் என்று உத்தரவிட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் அந்த விபரங்களை மறைத்து இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. நான் ஆக்கிரமித்து உள்ளதை பிரதிவாதிகள்

எடுத்துவிட கூடாது என்பதற்காக பொய்யான சங்கதிகளை சொல்லி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. அதனால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யப்பட வேண்டும் என்றால் சரியல்ல. அதனால் நான் கோரிய பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்று சொன்னால் சரியல்ல.

**Sd/.P.Jaisankar**
District Munsif Cum Judicial Magistrate,
Athoor.